# *மணிவிழா வாழ்த்து!*

## நாள்:- 05-09-2022

மங்கலம் சூழும் வாழ்க்கை மருவிலாத் தென்றலாகும்!
அங்கை விளக்கைப் போல ஆன்ற அன்பின் கொற்றம்;
திங்கள் பலவும் கண்டு தேரிய நற்காலச் சூழல்,
எங்கும்சீர் இன்பம் தோய்த்து இயங்கிட வைத்தன்றோ!

சிங்கமாய் **முரளி** தானும் தங்கை **வாசுகி** தன்னை,
அங்கமாய் வாழ்விலேற்ற கைத்தலம் பற்றி மகிழ்ந்து,
தங்கமகன் **சதீஷ்** தன்னை தரணியில் பெற்று வளர்த்து,
மங்கலமாய்மண வாழ்வு தன்னில் கைத்தலம் பற்றிய,

நங்கையவள் **அனிதா**வும் அழகுடன் பெற்ற **ரித்விக்**!
இங்கவர் வாழ்வில் இன்று இனியதாம் **மணிவிழா!**
பொங்கும் சீரன்பில் தோய்ந்து, பெயரன் மகனுமாக,
தங்க மருமகளும் மாண்புடன் செய்யும் ஒரு விழா!

எங்கும் நிறைந்து உறவின் கூட்டம் இணைந்து மகிழ,
தங்கமாய்த் தம்பி, தங்கையென இருபுறமும் சேர்ந்து,
பொங்கும் மணவாழ்வின் பூரிப்புடன் அணிசெய்ய,
எங்கள் மனமும் பூரிப்பில் இயைந்து வாழ்த்துவோம்!
அன்புடன்,

கு.ப. அசோகன்,

& மங்கையர்க்கரசி

